
# நல்ல பங்கு

**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். (லூக் 10:42)**



மேற்கண்ட வசனத்தின் மூலம், ஆண்டவர் நமக்கென வைத்திருக்கும் மேலான பாக்கியத்தை, நன்மைகளை, ஆசீர்வாதங்களை நாம் தெரிந்துகொள்ள, அதை பெற்றுக் கொள்ள அவர் எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். மார்த்தாள், மரியாள் என்ற இருவருமே ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். அவருக்கென தங்களை அர்ப்பணித்தனர். ஆனால் ஆண்டவர் தங்களுக்கு எதை தர விரும்புகிறார், எதற்காக தங்களை சந்தித்து இருக்கிறார் என்பதை புரிந்து கொள்வதில் வேறுபடுகின்றனர். இந்த வேறுபாடே இன்று தேவ பிள்ளைகளிடமும், குறிப்பாக பல்வேறு சபை பிரிவினரிடையேயும் காணப்படுகிறது. இதை நாம் சற்று ஆழமாக சிந்திப்போம்.

**லூக் 10:38** கூறுகிறது **"பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள்."**. இங்கு முதலாவது மார்த்தாளுடைய பெயரே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவளே ஆண்டவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள் என்று. பிறகு **லூக் 10:39** வசனத்தில், **"அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்."** இங்கு மார்த்தாளை வைத்தே அவளுடைய சகோதரியாகிய மரியாள் அடையாளப்படுத்தப்படுகிறாள். ஆனால் அதே வசனத்தில், மரியாள் ஆண்டவருடைய பாதத்தருகே உட்கார்ந்து அவர் வாயிலிருந்து வந்த தேவ சத்தத்தை முழுமனதோடு கேட்டுக்கொண்டிருந்தாள் என்பதை காணலாம்.

அக்காலத்தில் இருந்த மற்ற எந்த வேத பாரகர்கள் மற்றும் வேதத்தை போதிப்பவர்களை காட்டிலும், ஆண்டவருடைய வார்த்தை அதிகாரம் உடையதாய், வல்லமை உடையதாய் இருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். எனவே மற்ற எல்லாவற்றையும் மறந்து, அவர் பாதத்தின் அருகே அமர்ந்து, மெய்மறந்து, அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். இது ஆண்டவர் நம்மை ஒரு மேலான அனுபவத்திற்காக அழைத்து இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டவர்களுக்கே விளங்கும்.

**லூக் 10:40** வசனம் கூறுகிறது **"மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்."**. இங்கு மார்த்தாள் பற்பல வேலைகளை செய்வது ஏதோ தனக்காக அல்ல. ஆண்டவருக்காகவும், அவரோடு கூட வந்திருக்கும் சீஷர்களுக்காகவும் தான். அவருக்காகவும் மற்றவர்களுக்காகவும் நல்ல உணவை தயாரிக்க வேண்டுமே, இன்னும் அவர் தன் வீட்டில் தங்குவதற்கு வேண்டிய காரியங்களை செய்ய வேண்டுமே என்பதில் அவள் முனைப்போடு இருந்தாள். ஒரு விதத்தில் இவையாவும் தேவையே. அதற்காக கடினமாக உழைக்க வேண்டும். எனவே மார்த்தாள் பிரயாசப்பட்டதும் ஆண்டவருக்காக தான். ஆனால் ஆண்டவர் அவளுக்கு கூறிய பதிலோ "**இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்." (லூக் 10:41,42)**. ஆம் மார்த்தாளை போல இன்று ஆண்டவருக்காக உழைக்க வேண்டும், பெரிய காரியங்களை செய்ய வேண்டும் என்று செயல்படுகிற தேவ பிள்ளைகளும் சபை மக்களும் உண்டு. ஆண்டவருடைய சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்படவேண்டும், பெரிய ஆலயங்களைக் கட்டி எழுப்ப வேண்டும், அனேகர் பயன்படும் வகையில் பல்வேறு ஊழியங்களை ஏற்படுத்த வேண்டும் என்று தனி நபராகவோ, சபையாகவோ, ஒரு அமைப்பாகவோ பிரயாசப்படுவோர் உண்டு. இவர்கள் பிரயாசப்படுவதெல்லாம் ஆண்டவருக்காகவும், மற்ற தேவ பிள்ளைகளுக்காகவும் தான். இதில் தவறு ஒன்றும் இல்லை, ஆனால் இதற்கும் மேலான ஒரு அனுபவத்திற்குள்ளாய், தேவ வார்த்தையை, அவருடைய பிரசன்னத்தை மற்ற எதைக் காட்டிலும் அதிகமாய் தேடுவோரையே அவர் தேடுகிறார்.

மேற் போக்காக பார்க்கும் பொழுது ஒரு பெண்ணாய், மரியாள் தன் வீட்டிற்கு வந்திருப்போரை கவனிக்க வேண்டிய கடமையிலிருந்து தவறி இருப்பதை போல் தோன்றலாம். ஆனால் ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தை மற்ற எல்லாவற்றையும் மறக்கச் செய்து அவருடைய பாதத்தில் அவளை அமர வைத்தது. எனவே மார்த்தாளின் பார்வையில் மற்ற பொதுமக்களின் பார்வையில் அவள் எந்த வேலையும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து இருப்பவளாக காணப்படலாம். ஆண்டவருக்கும் மற்ற சீஷர்களுக்கும் அவளால் என்ன பிரயோஜனம் என்று நினைக்கலாம். ஆனால் ஆண்டவர் அறிவார் எவ்வளவுக்கெவ்வளவு ஆண்டவருடைய வார்த்தை ஒரு மனிதனுக்குள் செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஆண்டவருக்காக பிரகாசிப்பார்கள் என்று.

ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தை மார்த்தாளின் காதில் விழுந்த பொழுதும், அவள் தான் செய்ய வேண்டிய கடமையில், கண்ணும் கருத்துமாக இருந்தாளே ஒழிய, ஆண்டவரின் வார்த்தைகள் அவளை அவரின் பாதத்தில் வந்து அமர வைக்க வில்லை. ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று அவள் மாம்சத்தில் பிரயாசப் பட்டாள், ஆனால் தன்னால் அதை செய்ய இயலாத பொழுது, அவள் ஆண்டவரிடம் முறையிட்டாள். ஆனால் மரியாளோ ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து அவர் வார்த்தைகளை கேட்டு பெலன் கொள்வதே முதலாவது கடமை. அதன்பிறகே

ஆண்டவருக்காக விடாமுயற்சியோடு முறுமுறுக்காமல் செயல்பட முடியும் என்பதை அறிந்துகொண்டாள். இதை உணர்த்துவிக்க, ஆண்டவரும் மார்த்தாளிடம், நீ அனேக காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய், ஆனால் தேவையானது ஒன்றே, தேவ உறவு, தேவ ஐக்கியம், அவர் பிரசன்னம், அவருக்குள் வாழ்வது போன்ற தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை மரியாள் தெரிந்து கொண்டாள் என்பதை ஆண்டவர் மார்த்தாளிடம் கூறினார்.

எனவே இன்றும் வெளிப்படையாக பல்வேறு காரியங்களை ஆண்டவருக்காக செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு உழைப்போர் பலர். ஆனால் அவ்வாறு அவர்கள் செயல்பட துவங்கும் முன்னர், தேவையானது எது, முதன்மையானது எது, நல்ல பங்கு எது என்பதை உணர்ந்து, ஆண்டவருக்குள் தங்களை முதலாவது பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது ஆண்டவருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று முற்படும் பொழுது, அதில் துன்பம் ஏற்பட்டாலும் சக மனிதர்களின் ஆதரவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், தெளிவாக ஆண்டவர் என்ன செய்யச் சொல்கிறார் என்பதை கேட்டு செயல்படுவதன் மூலம், மார்த்தாளை போல, என்னால் தனியாக வேலை செய்ய முடியவில்லையே, ஊழியத்தில் பலன் ஏதும் இல்லையே என்று அவசரப்பட்டு கலங்காமல், அழைத்தவர் உண்மையுள்ளவர் எப்படியும் தங்களை நடத்துவார் என்று, மோசேயை போல, தாவீதைப் போல, அப்போஸ்தலனாகிய பவுலை போல எந்த பாதகமான சூழலின் மத்தியிலும், தேவ சித்தத்தை ஆவலோடு கேட்கும் அனுபவம், தேவ உறவு, தேவ ஐக்கியம் ஆகிய விட்டெடுபடாத இவைகள், ஆண்டவருக்குள்ளாய் தொடர்ந்து செயல்பட அவர்களுக்கு பெலனளிக்கும்.

ஆனால் மார்த்தாளை போல, வசன ஆழமில்லாமல் வெறும் உணர்ச்சிவசப்பட்டு செய்யப்படும் ஊழியங்களில் சோர்வு ஏற்படும் பொழுது, அது மற்றவரை நோக்கி குறை சொல்ல வழி வகுக்கும். ஆண்டவரிடமே முறையிட செய்யும். ஆனால் வெளிப்படையாக பெரிய காரியங்களை செய்தவர்கள் போல் காணப்படாத சிலர், அந்தரங்கத்தில் ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து அவருடைய ஐக்கியத்தில் நிறைந்திருப்பதன் மூலம், தேவ மக்களிடையே செய்யப்படும் காரியங்கள் அளப்பெரியது, அதை தேவன் அறிவார். கடந்த இரண்டு வருடங்களில் ஒரு வேளை பெரிய பெரிய கூட்டங்கள், சர்வதேச மாநாடுகள், திருச்சபைகள் ஆகியவை கூட்ட படாமல், செயல்படாமல் இருந்திருக்கலாம். இதனால் சில ஊழியர்கள் சோர்ந்துபோயினர். ஊழியத்திற்கு வேண்டிய தேவைகள் சந்திக்கப்படவில்லையே என்று கலங்கினார். ஆனால் யாரும் அறியா, தேவன் மட்டுமே அறிந்துள்ள, மரியாளை போன்றோர் இந்த கொரோனா காலத்தை அதிகமாய் பிரயோஜனப்படுத்தி, ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து, அவர் வார்த்தையை எவ்வித தடையுமின்றி கேட்டு, அதன் மூலம் எந்த சூழ்நிலையிலும் திடமனதோடு, இக்கொரோனா காலத்தை ஜெபத்தோடு ஜெயித்தனர், அவர்களை தேவனே அறிவார். எனவே நாமும் ஆண்டவர் கூறியபடி தேவையான நல்ல பங்கை, அவருடைய ஐக்கியத்தை, உறவை, வார்த்தையை முதலாவது தேடுவோம். அப்பொழுது மற்ற எல்லாம் நமக்கு கூட கொடுக்கப்படும். ஆமென், அல்லேலூயா.